பக்கங்கள் - 12 விலை : 5/-

# ஐக்கியதீபம்

## கூட்டுறவே வாழ்க!

கூடுகட்டி வாழும்இனம்
நாடுவிட்டு போய்விடாமல்
பாடுபட்டு வாழ்வதற்கு
ஈடுசெய்யும் கூட்டுறவே
வாயைக்கட்டி வயிற்றைக்கட்டி
காலைக்கட்டி வீழ்ந்திடாமல்
சோறுபோட்டு தமிழ்ச்சாறுதேடி
ஊரைக்காக்கும் கூட்டுறவே
வாழ்க !

— இருவை ஜீவமோகன்

RECEIVED
Periodicals Division
Library

தீபம் : 43 யூன் - 1994 ஒளி : 03

★ எதிர்வரும் 21-ம் திகதி -

# விமானத்தாக்குதல்களைக்கண்டித்து கூட்டுறவாளர்களின் மாபெரும் பேரணி!

## கலந்துகொள்ளுமாறு கூட்டுறவாளர்கள் அறைகூவல் !

தமிழீழப் பிரதேசங்களில் அண்மைக் காலங்களில் அரசினால் மேற்கொள்ளப்பட்டுவரும் கண்மூடித்தனமான விமானத் தாக்குதல்களினாலும், எறிகணை வீச்சுக்களினாலும், கூட்டுறவாளர்கள், சமூக சேவையாளர்கள், அப்பாவிப் பொதுமக்கள் அநியாயமாகப் படுகொலை செய்யப்படுவதைக் கூட்டுறவாளர்களாகிய நாம் கண்டிக்கிறோம். இக் கண்டனத்தை அரசுக்குத் தெரியப்படுத்தும் வகையில் எதிர்வரும் 21-ம் திகதி காலை யாழ் நகரில் நடைபெற விருக்கும் மாபெரும் கண்டனப் பேரணியில் கலந்து கொள்ளுமாறு அனைத்து கூட்டுறவாளர்களையும் அழைக்கிறோம்.

இவ்வாறு யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை கண்டனப் பேரணியை ஒட்டி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் அறைகூவல் விடுத்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது

1990 ம் ஆண்டுக்குப்பின் இராணுவ நடவடிக்கை என்ற போர்வையின் கீழ் காலத்துக்குக் காலம் விமானக்குண்டு வீச்சுக்களாலும், எறிகணை வீச்சுக்களாலும், கூட்டுறவாளர்கள், அப்பாவிப் பொதுமக்களும் - பச்சிளம் பாலகர்கள் முதல் முதியோர் வரை அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டு வருவதுடன் பல கோடிக்கணக்கான பெறுமதியான கூட்டுறவாளர்களினதும், பொதுமக்களினதும் உடமைகளும் அழிக்கப்பட்டு வருகின்றன.

இத்தகைய அநியாய அழிப்பில் நீர்வேலி ப. நோ. கூ. சங்கத்தலைவரும், அவரது மகளும், வவுனியா வடக்கு ப. நோ. கூ. சங்க (நெடுங்கேணி) தலைவரும், அவரது மனைவியும் மக்கள் சேவைக்கான கடமையில் ஈடுபட்டிருந்த வேலணை ப. நோ. கூ. பணியாளர் ஒருவரும் பலியானமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அநியாய இழப்புக்களையும், படுகொலைகளையு; கண்டித்து பலதடவைகளில் நடவடிக்கைகள் எடுத்து, கண்டன ஊர்வலங்கள் நடாத்தியும், அரசுக்குத் தெரியப்படுத்தியும் அரசு எவ்வித நடவடிக்கையும் எடுக்காது தொடர்ந்தும் இத்தகைய தாக்குதலில் ஈடுபட்டுவருகிறது.

(11ம் பக்கம் பார்க்க)

## பொறுப்புள்ள கூ. பணியை குறைத்து மதிப்பிட முடியாது !

" அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டதை அடுத்து பிரதேச செயலர்களுக்குக் கையளிக்கப்பட்டுள்ள கூட்டுறவுப் பணிப்பொறுப்புக்களை குறைவாக மதிப்பிட முடியாது. மக்கள் நிறுவனமான கூட்டுறவுச்

(11ம் பக்கம் பார்க்க)

## 'கெயர்' சுழற்சி நிதியில் விவசாயக்கடன்

கெயர் யூ. எயிட் விவசாயத் திட்டத்தின்கீழ் விவசாயிகளிடம் இருந்து அறவீடு செய்த பணத்தில் சுமார் பத்தரை லட்ச ரூபா பெறுமதியான உள்ளீடுகளை குறைந்த விலையில் விவசாயிகளுக்கு கடன் அடிப்படையில் தனது அங்கத்துவ சங்கங்களுக்கு யாழ். மா. கூ. சபை வழங்யுள்ளது.

சுன்னாகம், பண்டத்தரிப்பு, மானிப்பாய், வடமராட்சி கிழக்கு, வலி கிழக்கு வடபகுதி, வ. கி. தெ. பகுதி ப. நோ. கூ. சங்கங்களுக்கும், முள்ளிதச்சுத்தொழிலாளர் கூ. சங்கத்துக்கும், பன்னாலை, தெல்லிப்பழை, துர்க்காபுரம், இணுவில்ஸ்ரீமுருகன், சரசாலை ஸ்ரீ முருகன், துன்னலை மகளிர் சி. க. கூ. சங்கங்களுக்குமே வழங்கப்பட்டுள்ளன.

★ உலகிற் கூட்டுறவில் உயர்ந்ததெம் ஈழம் ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிந்தனைச் சுடர்

"ஐக்கியம், சிக்கனம் குடியாட்சி, நெறி முறைமை, சுயாதீனம் என்ற அடிப்படைக் கொள்கைகளைக் கொண்டு அமைக்கப்படுவதே கூட்டுறவு"

**W. P. வாக்கின்ஸ்**

# ஐக்கிய எண்ணம்

## மன உறுதி வெற்றியளிக்கும்

கடந்த 10 ஆண்டுகளாக தமிழீழப் பிரதேசங்கள் எங்கும் விமானக்குண்டு வீச்சுத் தாக்குதல்; இராணுவ முகாம்களில் இருந்து பலத்த எறிகணைத் தாக்குதல்கள் இவைகளெல்லாம் அன்றாடம் நடைபெறும் சம்பவங்களாகி விட்டன.

அண்மைக் காலங்களில் இத்தாக்குதல்கள் பெரும்பாலும் வணக்கத்திற்குரிய ஸ்தலங்கள். பாடசாலைகள் மக்கள் குடியிருப்புகள் ஆகியவற்றை இலக்காகக்கொண்டே நடாத்தப்பட்டு வருகின்றன.

இக்கண்மூடித் தனமான தாக்குதல்கள், கால, நேர வித்தியாசமின்றி, வயது வித்தியாசமின்றி குடும்பங்களின் எதிர்கால சந்ததியினரை பூண்டோடு அழிக்கும் வகையில் கொடூரமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாண்டு இடம்பெற்ற வெவ்வேறு குண்டுவீச்சுத் தாக்குதல் சம்பவங்களில் கூட்டுறவாளர் குடும்ப அங்கத்தவர்கள், தந்தை - மகள் - கணவன் மனைவி என்று அநியாயமாக அழிக்கப்பட்டுள்ளனர். இது மனித நேயமா ? அல்லது மனித இன அழிப்பா ?

இத்தனை அழிவுக்கும் மத்தியில் நெருக்கடியான காலங்களில்; கூட்டுறவுச்சேவையில் உள்ளவர்கள், தம் உயிரையும் துச்சமென மதித்து விமானக் குண்டு வீச்சுகளுக்கூடாகவும், பலத்த எறிகணைத் தாக்குதல்களின் மத்தியிலும், உலங்கு வானூர்திகளின் 50 கலிபர் துப்பாக்கி வேட்டுகளினூடாகவும் "பரந்த வல்லை" வெளியூடாக பருத்தித்துறை சென்று உணவுப் பொருட்களைக் கொண்டுவந்து தருகின்ற பணியாளர்களையும், சமூக சேவையாளர்களையும் அரச பயங்கரவாதம் விட்டுவைப்பதில்லை.

நாளாந்த உணவுப்பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக சந்தைகள், கடைகளுக்குச் செல்லும் பொது மக்களையும் அரச பயங்கரவாதம் விட்டுவைக்கின்றதா ? அதுவும் இல்லை.

மக்கள்படும் இன்னல்களைக் களைந்து அவர்களை வாழ்விக்க வந்ததே கூட்டுறவு. அத்தகைய கூட்டுறவு இத்தனை கொடூரங்களையும் பார்த்துக்கொண்டிருப்பதா ? உலகில் கூட்டுறவால், கூட்டுறவாளர்களால்; உயர்ந்து நிற்கும் எம் தமிழ் ஈழத்தில் கூட்டுறவாளர்கள், பொதுமக்கள் அநியாயமாகப் படுகொலை செய்யப்படுவதா ?

மக்கள் மத்தியில் குவிந்து வளரும் கூட்டுறவுணர்வுடன்; அடம்பன் கொடிபோல் ஒன்றாய்திரண்டு; கூட்டுறவின்கண்டனக் குரலை அரசின் செவிகளில் பதியவைக்க வேண்டாமா ?

இரண்டாம் உலக யுத்தம் ஆரம்பித்த வேளையில் "குண்டுகளையும் எதிர்த்துப் பண்டகசாலைச் சங்கம்" அமைத்து பசி, பட்டினியைப் போக்கிய "ஐக்கிய இயக்கம்", இன்று கற்பக விருட்சமாய், திடகாத்திரமாகவும் உறுதியோடும் தமிழீழத்தில்உயர்ந்து நிற்கிறது.

அரசின் கொடூரமான தாக்குதல்களுக்கு கூட்டுறவாளர்களின் "ஐக்கியம்" முடிவு கட்டுமென்பது திண்ணம் ! அந்த நம்பிக்கை வீண்போகாதவாறு மனஉறுதியுடன் கூட்டுறவாளர்கள் அனைவரும் அடம்பன் கொடிபோல் ஒன்றாய் திரண்டு கூட்டுறவாளர்களின் மன உறுதியைக் காட்டுங்கள். வெற்றி நிச்சயம் கூட்டுறவாளருக்கே !

**"அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு"**

# கூட்டுறவு மகளிர் குழுக்களின் நோக்கமும் செயற்பாடுகளும்

**நோக்கம் :**

கூட்டுறவு இயக்கத்தை அபிவிருத்தி செய்யவும், விரிவுபடுத்தவும், வலுப்படுத்துவதற்குமான முயற்சிகளில் மகளிரின் பங்களிப்பை கூட்டுறவு அமைப்பில் எல்லா மட்டங்களிலும் அதிகரிக்கச் செய்தல்.

**செயற்பாடுகள் :**

★ சங்க, மாவட்ட மட்டங்களில் மகளிர்குழு அமைப்புக்களை அமைத்து செயல்படுத்தல்.

★ கூட்டுறவு இயக்கத்தில் மகளிர் அங்கத்துவம், தலைமைத்துவம் என்பன அதிகரிக்கக்கூடியவாறு மகளிரின் கூட்டுறவு அறிவை வளர்த்தல், வழிகாட்டல், உதவிநல்குதல், கூட்டுறவுமூலம் நடைமுறைப்படுத்தக்கூடிய மகளிர் பொருளாதார அபிவிருத்தி செயல்பாடுகளை இனங்கண்டு கூட்டுறவு அமைப்புகளின் ஒத்துழைப்பு செயல்படுத்தல்.

★ மகளிர் எதிர்நோக்கும் பிரச்சனைகளை இனம்கண்டு, அவர்கள் மத்தியில் சமத்துவம் சிக்கனம், தன்னுதவி, பரஸ்பர உதவி, ஒத்துழைப்பு மனப்பான்மை என்பவற்றை ஏற்படுத்த கூட்டுறவு அமைப்புக்களின் மூலம் பிரசாரங்கள்

★ மகளிர்களுடன் தொடர்புடைய குடும்பநலன், போஷாக்கு, குடும்ப வரவு செலவுத்திட்டம், குடும்பப் பொருளாதார அபிவிருத்தி நுகர்வோர் பாதுகாப்புச் சட்டங்கள்பற்றிய அறிவை வளர்த்தல்.

★ எமது பிரதேச மூலவளங்களைக் கொண்டு, சுயவேலை வாய்ப்பு மூலம், உதிற்பத்திகளைப்பெருக்கி அவற்றுக்கான சந்தை வாய்ப்புக்களைப் பெறுவதற்கு திட்டங்கள் வகுத்து கூட்டுறவு அமைப்புகள்மூலம் பிரசாரங்களைமேற்கொள்ளல்

★ கூட்டுறவு மகளிரால் மேற்கொள்ளப்படும் உற்பத்திகளின் தரங்களை பேணுவதற்கான வழிவகைகளைக் கண்டு சந்தைத்தேவைகளுக்கும், பாவனைக்கும், ஏற்ற வகையில் உற்பத்திகளை செய்யத்தூண்டுதல், அவற்றை சந்தைப் படுத்துவதற்கான விற்பனை நிலையங்களை கூட்டுறவு அமைப்பு மூலம் ஏற்படுத்தநடவடிக்கைகள்எடுத்தல்

★ மகளிர் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள ஏனைய நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்கள் மூலமான அனுகூலங்களைப் பெறுத[illegible]

★ எமது பிரதேச சமூக கலை, கலாச்சார பண்பாடுகளை பாதுகாப்பதற்கான திட்டங்களை வகுத்து கூட்டுறவு மகளிர் விடயம் தொடர்பான மாநாடுகள், கருத்தரங்குகள், போட்டிகள் நடாத்தி மகளிர் குழுக்களின் நோக்கங்களை அடைய முயற்சி செய்தல்.

★ மகளிர் மத்தியில் கூட்டுறவுக் கொள்கை பற்றிய அறிவை வளர்த்து அவர்கள் தன்னிச்சையாகவே ஒன்றுபட்டு கூட்டுறவு முயற்சிகளில் ஈடுபட்டு, இம் முயற்சிகளின் வாயிலாக முழுமையான கூட்டுறவு சமுதாயம் ஒன்றைத் தோன்றச் செய்தல்.

**திருமதி. வே. செல்வரத்தினம்**
( மகளிர் விவகார உத்.
யாழ். மா. கூ. சபை

## பொதுக் கூட்டம்

மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் யூலை மாதம் 3 - ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 - 30 மணிக்கு சங்கத்தலைவர் திரு. வ. அ வரதராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

**★ குண்டையும் எதிர்த்தது பண்டக சாலையே ★**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘அறிவுடையார் ஆவதறிவார்’ இதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தார்

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் அமரர் பேராசிரியர் **அ. துரைராசா** அவர்களின் மறைவையொட்டி அன்னார் யாழ். பல்கலைக் கழகத்திற்கு ஆற்றிய சேவைகள் பற்றிய யாழ். பல்கலைக் கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் **அ. சண்முகதாஸ்** அவர்களின் சிறப்புக்கட்டுரை இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ளது.



பேராசிரியர் அ. துரைராசா அவர்கள் மீளாத்துயில் கொண்டுவிட்டார்கள். அவரைப் பலரும் பல்வேறு நிலைகளிலே இன்று நினைவுகூருகின்றார்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குத் துணைவேந்தராக வந்து அவர் ஆற்றியபணி என்ன என்பதுபற்றி எண்ணுதல் அந்நிலைகளுள் ஒரு நிலையாகும்.

புதிய பீடங்கள், புதிய துறைகள், புதிய கற்கைநெறிகள் ஆகியவற்றைத் தொடக்குவதிலே பேராசிரியர் துரைராசா மிகுந்த ஆவலுடையவராக இருந்தார். கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாய பீடம் இவருடைய காலத்திலேயே செயற்படத் தொடங்கியது. பொறியியற் பீடத்துக்குரிய தொடக்க வேலைகள் நடைபெற்றன. அப்பீடத்தை ஒழுங்கு செய்வதற்கென ஒரு பேராசிரியரும் பணி நிலைப்படுத்தப்பட்டார். தொழிலாளர் கல்வி, புறநிலைக் கல்வி ஆகிய புதிய கல்விசார் அலகுகள் தொடங்கப்பட்டன. இவ்வாறமைந்த புதிய கல்விசார் முயற்சிகளுக்குப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த பலருடைய ஒத்துழைப்பு இருந்தது இவ்வொத்துழைப்பை அவர் நன்கு பயன்படுத்தினார்.

இவருடைய காலத்திலே பல்கலைக்கழக ஆசிரியர்களுடைய ஆய்வு வெளியீடுகளுக்கு நல்ல வாய்ப்பு ஏற்பட்டது. பல ஆசிரியர்கள் தங்களுடைய ஆய்வு நூல்களை வெளியிடுவதிலே பல இடர்பாடுகளை எதிர்நோக்கினர். இதனை நீக்கும் வண்ணம், செலவிடப்படாமல் எஞ்சும் பல்கலைக் கழகப் பணத்தைத் தாராளமாக வழங்க ஒழுங்கு செய்தார். ஆய்வுத் திட்டங்களை மேற்கொண்டுநடத்த ஆய்வுப் பணம் வழங்கப்பட்டது. எழுதப்பட்ட நூல்கள் பல்கலைக் கழக வெளியீட்டுக் குழுவின் பரிந்துரைக்கேற்ப வெளியிடப்பட்டன.

பல்கலைக் கழக விளையாட்டுத்துறை . இவருடைய காலத்திலேயே புதுமெருகு பெற்றது. விளையாட்டுத் துறையிலே ஈடுபட்ட மாணவர்களுக்கு இவர் கொடுத்த ஊக்கம், அவர்கள் இவர்மேல் மிகுந்த அன்புவைக்கக் காலாயிற்று. இவ்வாறு பல்கலைக் கழகம் தன்னளவிலே வளர்ச்சி பெறவும், அது சமூகத்துக்குப் பயனுள்ள நிறுவனமாக அமையவும் பேராசிரியர் துரைராசா பணியாற்றினார். அன்னாரின் மறைவு ஈடுசெய்தற்கரியது. **“ அறிவுடையார் ஆவதறிவார் ”** என்பதற்கு இலக்கணமாக இருந்த அப் பேராசிரியரைத் தமிழினம் என்றுமே நினைவு கூரும்.

**பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ்**

## பேரறிஞனுக்கு அஞ்சலி!

யாழ். பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக இருந்து எமது கலாச்சார விழுமியங்களைப் பேணிக்காத்தும்: “ **ஊற்று** ” நிறுவனத்தின் தலைவனாய், ஏழை, எளியவர்களின் உற்ற தோழனாய் அவர்கள் வாழ்வை மேம்படுத்தி மறைந்த பேரறிஞர் **அ. துரைராசா** அவர்களுக்கு கூட்டுறவாளர்கள் சார்பில் “ ஐக்கிய தீபம் ” தனது அஞ்சலியை காணிக்கையாக செலுத்துகிறது.

# பேரறிஞர் துரைராசாவின் கல்விபற்றிய சிந்தனைகள்!

“ வருங்காலத்தில் மாவட்ட அடிப்படையிலான அனுமதி குறைக்கப்படலாம். இது குறித்து இப்போது ஆராய்ந்து வரும் ஆணைக்குழு, அவ்வாறு பரிந்துரைக்கும். மாவட்ட அடிப்படையில் பல்கலைக்கழகங்களில் நுழையத் தமிழ் மாணவர்களுக்கு வாய்ப்புக்கள் குறையும். அப்போது கவலைப்பட்டும் பயனில்லை. இனிமேலாவது நிலமையைப் புரிந்துகொண்டு நடக்க வேண்டும் ”

★

“ பரீட்சையின் நம்பகத்தன்மையைக் கட்டுப்படுத்திக் காப்பாற்றுவது அவசியம். அல்லது பரீட்சையில் நம்பிக்கை இல்லாது போய்விடும். பரீட்சை புனிதமானது, தவறுகளைத் தடைசெய்வது எப்போதும் இயலாததுதான் என்றாலும், தவறுசெய்தால் கடும் நடவடிக்கைஎடுக்கவேண்டும். பரீட்சையில் மோசடிசெய்யும் ஆசிரியர்கள் அந்தத் தொழிலுக்கு லாயக்கற்றவர்கள். ” “ஆசிரியருக்கு ஒரு “இமேஜ்”-படிமம் இருக்க வேண்டும். எல்லோரும் ஆசிரியராக வரமுடியாது. அதற்கும் ஒரு அர்ப்பணிப்பு வேண்டும். ஆசிரியர் முன்மாதிரியாக இருக்க வேண்டும். கற்பித்தல் தொழிலில் கரிசனையுடன் ஈடுபட வேண்டும். ”

“ . . . தனியார் கல்வி நிறுவனங்களைக் குழப்பினால் எமது கல்வியில் இன்னும் பின்னடைவு ஏற்படும். பள்ளிக்கூடங்களைத் திருத்துங்கள் எல்லாம் சரியாகிவிடும். ”

★

“ பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் காரணமாக தனியார் கல்வி நிறுவனங்களால் பணக்கார வர்க்கத்தினரே பயன் பெறுவர் என்பது உண்மை. வசதி உள்ளவர்கள் ஒரு பாடத்திற்கு இரண்டு ரியூஷனுக்கு அனுப்பும் வழக்கமும் காணப்படுகிறது. வசதியற்ற பிள்ளைகள் சாதாரண பள்ளிக்கூடங்களில் படிக்க வேண்டிய நிர்ப்பந்தம். எமது பள்ளிக் கூடங்கள் சமூகப் பொறுப்புடனும், அர்ப்பணிப்புடனும் கல்வி வழங்கினால் இந்நிலை உருவாகாது. ”

★

“ இரண்டு விகிதமான தமிழ் மாணவர்கள்தான் பல்கலைக்கழகம் செல்கிறார்கள். ஆயிரக்கணக்கானோர் பல்கலைக்கழக அனுமதி மறுக்கப்பட்டு அலைகிறார்கள். தொழில்சார் திறமையுள்ள இளைஞர்களை உருவாக்கும் பணியில் கல்வி நிலையங்கள் கவனம்செலுத்த வேண்டும். உண்மையான கல்வியானது உற்பத்திக்கான உழைப்புடன் பிணைந்ததாகவே இருக்க முடியும். இது எங்கள் சமூக உருவாக்கத்திற்கு மிக முக்கியமானது ”

நன்றி.

‘ஈழநாதம்’ வெள்ளிமஞ்சரி

★ கல்வி மனிதனை மங்காத மாணிக்கமாக மாற்றும் ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏமாறாதே; ஏமாற்றாதே!2

வாசகர்களின் வரவேற்புக்கு நன்றிகள்.

வசந்தகுமாருக்கு அவனது நேர்மையான சேவைக்குச் சோதனைக்காலம் ஆரம்பித்துள்ளது. வாசகர்கள் பொறுமையாக இருந்து நடைபெற இருக்கும் சோதனைகளை அவதானியுங்கள்.

காசு குறையுது என்றால் G. M. நம்புவாரா? . . . . சாந்தி சொன்னதைப் போல் வேலையை விட்டு விட்டால் நிவராணமும் கிடைக்கும். வேலையை விடுவதாயின் "கள்ளன்" என்ற பெயருடன்தான் விடவேண்டி வரும். இவ்வளவுநாளும் நான் செய்த சேவையும் வீணாகப்போய் விடும். என்ற சிந்தனை ஓட்டத்தின் இடையே சைக்கிள் நல்லதம்பியரின் வீட்டுப் படலை அடியில் தானாகவே நின்றுவிட்டது. . . .

காசு கேக்கிறதெண்டால் இவரிட்டை தான் கேட்க வேண்டும். நல்லதம்பியர் பிரச்சனையான ஆளாகவும் இல்லை . . . ஆனால் தட்டுப்படான சாமான்கள் கேட்பார். கூடுதல் விலையில் கொண்டு போய் விற்பார். ஆனால் நான் அதுஒன்றுக்கும் இடம்கொடுப்பதில்லை. என்னைக் கிளையால் மாற்ற வேண்டுமென்ற ஒரு எண்ணமும் அவரிட்டை இருக்கு. . . .

இருந்தும் "நல்லதம்பி அண்ணை" என்று வசந்தகுமார் தன்னையும் அறியாமல் கூப்பிட்டு விட்டான் . . .

படலையடியில் நாய் குரைக்கும் சத்தம் கேட்டு வெளியில்வந்த நல்லதம்பியர், மனேச்சர் போல கிடக்கு மாறி வந்திட்டியளோ என்றார்.

வசந்தகுமாருக்கு நெஞ்சில் முள்தைத்த மாதிரி இருந்தது.

தம்பி நானும் கக்டைகு வரவேணும் என்று இருந்தனான். நீர் காசு கட்டிப்போட்டுப் போகும்போது வரலாம் என்றிருந்தேன் . . .

நல்லதம்பி அண்ணை எனக்குஒருஉதவி செய்யவேண்டும். எனக்கொரு 500/ ரூபா அவசரம் தேவை. பிறகு சம்பளம் எடுத்துத் தாறன், ஓ! மனேச்சருக்கு இப்பதான் ஆட்களைப் பற்றித் தெரியுது என்றவர், எழுந்து சென்று 1000 ரூபாவை எடுத்து வந்து கொடுத்தார்.

வசந்தகுமாருக்கு இது இரண்டாவது தலையடி, அண்ணை எனக்கு 500/ ரூபா காணும்.

இல்லைத்தம்பி வைச்சிரும் நான் பிறகு கிளைக்கு வாறன் மாத்தித்தாரும். சாமானும் வேண்டவேணும்.

வசந்தகுமாருக்கு என்னவோபோல் இருந்தது. இப்ப காசை வேண்டிக் கட்டுவம் என்று எண்ணியவாறு அவரிடம் விடை பெற்றுக்கொண்டு தலைமைப் பணியகத்துக்குச் சென்றான், வசந்தகுமார் . . . அடுத்தஇதழில்சந்திக்கும்வரை

— நாரையூரான்

# சர்வதேசகூட்டுறவுதின விழாபோட்டிகள்

1994ம் ஆண்டு சர்வதேச கூட்டுறவாளர் தினத்தைஒட்டி யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை இம்முறை தனது அங்கத்துவசங்கங்களின் அங்கத்தவர்களுக்கும், பணியாளர்களுக்கும், பாடசாலை மாணவர்களுக்குமிடையே பல போட்டிகளை நடாத்த தீர்மானித்துள்ளது.

மாவட்ட மட்டத்தில் நடாத்தப்பட விருக்கும் இப்போட்டிகளை பல பிரிவுகளாக நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

இம்முறை ஆரம்ப சங்க அங்கத்தவர்களுக்கும், இரண்டாம்படிச் சங்க அங்கத்தவர்களுக்கும் (சமாசம்) தனித்தனியாக பேச்சு, கட்டுரை, குழுப் பாடல், கிராமிய நடனம், நாடகம் ஆகியவற்றில் போட்டிகளும்;

பணியாளர் மட்டத்தில் பேச்சு, கட்டுரை, வினாடி வினாப் போட்டிகளும்;

பாடசாலை மாணவர்களுக்கிடையே ஆரம்ப பிரிவு, கீழ்பிரிவு, மத்துயபிரிவு, மேற்பிரிவு, அதிமேற்பிரிவு ரீதியாக பேச்சு, கட்டுரை, வினாடி வினாப் போட்டிகளும்;

கூட்டுறவுப் பயிற்சிக்கல்லூரி மாணவர்களுக்கிடையே பேச்சு, கட்டுரைப்போட்டிகள் நடாத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

போட்டிகளுக்கான முழு விபரங்களையும் கூட்டுறவுச் சங்கங்களிலும், பாடசாலைகளிலும், யாழ் மாவட்ட கூட்டுறவுச்சபையிலும் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது. போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் 30-6 94க்குமுன் செயலாளர், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை இல. 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பட வேண்டும்.

### துண்டுப் பிரசுரம்

சுகாதாரம், போசாக்கு, சூழல்பார்துகாப்பை முன்னிட்டு அதுபற்றிய விளக்க துண்டுப் பிரசுரமொன்றை தென்மராட்சிக் கூட்டுறவுக்கோட்டம் வெளியிட்டுள்ளது.

## கூட்டுறவுச் செய்திகள்.

### தையல் பயிற்சி

சாவகச்சேரி ப. தெ. வள அ. கூ. சங்கம் அண்மையில் அல்வாய் வடக்கில் இலவச தையல்பயிற்சி நிலையம் ஒன்றைத் திறந்துவைத்துள்ளது.

அல்வாய் வடக்கு மகளிர் குழுத்தலைவி திருமதி. சோ. பேபி சகுலா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சங்கத் தலைவர் திரு. பொ. சின்னராசா பயிற்சி நிலையத்தை திறந்துவைத்து தையல் பயிற்சியை ஆரம்பித்துவைத்தார்.

### விவசாய உபகரணங்கள்

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நீர் இறைக்கும் இயந்திரங்கள், தெளிகருவி, 25 ஆயிரம் வாளிகள் என்பவற்றைக் கொழும்பிலிருந்து கப்பல்முலம் கொண்டுவரவுள்ளது.

பாதுகாப்பு ஒருங்கிணைப்புக்குழு இதற்கான அனுமதி மேற்படி சமாசத்திற்கு வழங்கியுள்ளது என தெரிவிக்கப்பட்டது.

**கூட்டுறவாளர்களே !**

கூட்றவுச்சங்க செய்திகளையும், சங்க அபிவிருத்தி சம்பந்தமான கட்டுரைகள், மற்றும் கதை, கட்டுரைகள் போன்ற விடயங்களை ஐக்கிய தீபத்திற்கு சுருக்கமாக எழுதி ஒவ்வொரு மாதமும் 10 ம் திகதிக்குப் பிந்தாமல் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைக்கு அனுப்பிவையுங்கள்.

ஆசிரியர்

# பண்டிதர் குடியிருப்பு மக்களுக்கு 13 லட்ச ரூபா நிதி உதவி

இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்து கெற்பேலி பண்டிதர் குடியிருப்பில் தங்கியுள்ள தீவக மக்களின் குடியிருப்புகளை புனரமைக்க 10 லட்சரூபாவும், நோயாளர் உயிர்காக்கும் வாகனத்திற்கு மூன்று லட்ச ரூபா தீவக ப. நோ. கூ. சங்கங்கள் வழங்கியுள்ளன.

நோயாளர், காயமுற்றோர் உயிர்காக்கும் வண்டி தற்போது பண்டிதர் குடியிருப்பில் சேவையிலீடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவு நிறுவனங்கள் வேண்டிநிற்கும் தலைமைத்துவம்

இ. இரத்தினம் (விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

குறிக்கப்பட்ட ஒரு தொகுதியினரை தன்னிச்சையாக செயல்படும் பொருட்டு தூண்டி அதன்மூலம் அத் தொழிலின் செயற்பாட்டின் மூலம், அந் நோக்கத்தை அடையக்கூடிய ஆற்றல் உடையவர் தலைவர், அல்லது பொறுப்பாளர் எனவும் அவர் கொண்டிருக்கின்ற அம்சங்கள் தலைமைத்துவம் எனவும் பொதுவாக வரையறுக்கலாம். தலைமைத்துவம் நடத்தையுடன் தொடர்புடையது. ஒரு பகுதியின், அல்லது நிறுவனத்தின் பொறுப்பாக இருக்கின்ற தலைவர் நிறுவனத்தின் நோக்கத்தை அடையக்கூடிய வகையில் அப்பகுதியை வழிநடத்திச் செல்ல வேண்டும்.

தலைமைத்துவத்துக்கு என பிறக்கின்றார்கள் என்ற கருத்துமாறி இன்று ஆளுமையால், மரபுரீதியாக அந்தஸ்துமூலம், செயற்பாட்டின் மூலம் தலைவர்கள் ஆகிறார்கள்.

ஒரு நிறுவனத்தின் நிர்வாகத்திற்கு பொறுப்பாக இருக்கின்றவர்கள் கீழ்வரும் பண்புகள் உடையவராக இருத்தல் வேண்டும்.

1. புத்திகூர்மை உடையவராக இருத்தல்
2. சுயநம்பிக்கை உடையவராக இருத்தல்
3. சிறந்த தீர்மானம் எடுக்கும் ஆற்றல் உடையவராக இருத்தல்
4. முன்னுணர் நடவடிக்கையுடன் செயல்படுவராக இருத்தல்
5. ஏனையவர்களுடன் நல்ல தொடர்பையும், சுமுகமான உறவை வளர்த்துக் கொள்பவராகவும் இருத்தல் வேண்டும்.

எந்த ஒரு நிறுவனமும் தனது இலக்கை இலகுவாகவும் விரைவாகவும் அடைவதற்கு கீழ்வரும் தலைமைத்துவப் பண்புகள் உடையவர்களால் வழிநடாத்தப்படுதல் வேண்டும்.

1. தலைவர் அல்லது பொறுப்பாக இருப்பவர் இடுக்கின்ற கட்டளைகளை கீழ் மட்டத்தில் உள்ளோர் தாமாக முன்வந்து பொறுப்பேற்று நிறைவேற்றக்கூடிய சூழ்நிலை ஏற்படுத்தி இருத்தல் வேண்டும்.

2. தலைமையாக இருப்பவருக்கும் கீழ்மட்டத்தில் இருப்பவருக்கும் போலியானதாக அன்றி விசுவாசமான உறவு இருத்தல் வேண்டும்.

3. தலைமையாக இருப்பவர் கீழ்மட்டத்தில் எழுகின்ற பிரச்சனைகளை உடனுக்கு உடன் தீர்க்க வேண்டும்.

4. தலைமையாக இருப்பவர் கீழ்மட்டத்தில் இருப்பவருக்கு வழிகாட்டியாகவும், முன்மாதிரியாகவும் இருத்தல் வேண்டும்.

5. பிழைகள் ஏற்படும் இடத்து தலைமையாக இருப்பவர் குறிப்பாக சுட்டிக்காட்டி பிழைகள் தனிமையில் எடுத்துக் காட்டுவதுடன் திறமைகள் பலருக்கு முன்நிலையிலும் பாராட்ட வேண்டும்.

6. தலைமையாக இருப்பவர் பாரபட்சமின்றி கீழ்மட்டத்தில் உள்ளவர்களை வழிநடாத்த வேண்டும்.

7. தலைமைத்துவம் தொடர்பான நுட்பம் தந்திரோபாயங்களை அறிந்தவராக இருத்தல் வேண்டும்.

கூட்டுறவு நிறுவனங்கள் இத்தகைய தலைமைத்துவத்தை பேணுமாக இருப்பின் இயக்குனர்கள், பணியாளர்கள், அங்கத்தவர்கள், பொது மக்கள் ஆகியோருக்கு இடையில் சுமுகமான உறவு பேணப்படுவதுடன் இவர்களுக்கு இடையில் ஏற்படுத்தப்படும் உந்துவிசை கூட்டுறவு நிறுவனங்கள் தமது நோக்கத்தை இலகுவாகவும் விரைவாகவும் அடையும் என்பதில் சந்தேகம் இல்லை.

# கூட்டுறவுக் கொள்கைகள்

1966ம் ஆண்டு அனைத்துலக கூட்டுறவு நிறுவனத்தினால் (I.C.A.) பிரகடனப்படுத்திய ஆறுகொள்கைகளை கடந்தமாதம் பிரசுரித்திருந்தோம். அந்த ஆறுகொள்கைகளில் தலையாய கொள்கையான மக்களின் விருப்பபார்ந்த அங்கத்துவம்பற்றி விளக்குகிறார் (கூ. பயி. அளிப்பு உத்தியோகத்தர்) வீ. கே. சிவராஜசுந்தரம்.

அறிவியல் ரீதியாகவோ, பொருளாதார ரீதியாகவோ மக்கள் வளர்ச்சியடையாது விலங்குகளோடு விலங்குகளாக இருந்த காலத்திலும் அவர்களிடையே கூட்டுறவுப் பண்புகள், தன்மைகள் பிணைந்து காணப்பட்டாலும், '' கூட்டுறவு '' என்பது கோட்பாட்டு ரீதியாக, நிறுவன அமைப்பாக உருவமைந்தது 17ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆகும். இன்று இக்கூட்டுறவு இயக்கம் மாபெரும் அமைப்பாக, உலகம் போற்றும் இயக்கமாக அமைந்தது என்றால் அதற்குக் காரணம் '' கூட்டுறவு '' உறுதியான, திடமான, கட்டுப்பாடான ஒரு கொள்கை வழி நிற்றலே ஆகும்.

இக்கூட்டுறவுக் கொள்கைகளை நாம் நோக்குவோமாயின் இவற்றின் சிறப்புத் தன்மைகள் வெளிப்படும். முதலாவது கொள்கையில் கூட்டுறவு என்பது பின்வரும் அம்சங்களை அல்லது பண்புகளைக் கொண்டதாக இருக்கின்றது.

1 தன்விருப்பார்ந்த சேர்க்கை
2 தடையற்ற அங்கத்துவம்
3 பொறுப்புக்களை ஏற்றுக் கொள்ளும் பண்பு.

கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்புரிமையானது சுயேட்சையானதாக இருத்தல்வேண்டும். விருப்பார்வம்கொண்ட அனைவருக்கும் உறுப்புரிமை கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும். அதாவது சங்கத்தில் இருந்து பயன்பெற விரும்பும் அனைவருக்கும் எவ்விதமான செயற்கையான கட்டுப்பாடுகளும் இல்லாதவகையில் வழங்கப்பட வேண்டும். அதேபோன்று சங்கத்தில் சேர்வதற்குத் தூண்டும் வகையில் புறக்காரணிகளின் நிர்ப்பந்தமும் இருக்கவேண்டும்.

செயற்கையான தடைகள் எனும்போது, ஒரு நாட்டில் அல்லது சமூகத்தில் உள்ள சாதி, இன, மத, மொழி உட்பட செயற்கைத் தடைகள் இருக்கக்கூடாது. இத்தகைய செயற்கைத் தடைகள் அந்தந்த பிரதேசங்களில் பரந்துகாணப்பட்டாலும் கூட்டுறவில் இது தவிர்க்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்துவம்ஆனது, பொறுப்புக்களை ஏற்கக்கூடியவர்களுக்கும், சங்கத்தில் இருந்து நன்மைகளைப் பெறக்கூடியவர்களுக்கும் கிடைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

இங்கே பொதுவான அமைப்புக்களைவிட; கூட்டுறவில் சிறப்புத்தன்மை, தனித்துவம் ஆகியன மேலோங்கி இருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

அதாவது எவர் பொறுப்புக்களை ஏற்கத் தயாராய் இருக்கின்றார்களோ அவர்கள் நன்மைபெறக்கூடியவாறு கூட்டுறவு அங்கத்துவம் இக் கொள்கைமூலம் பெருமைப் படுத்தப்பட்டுள்ளது.

## நிர்வாகிகள் தெரிவு

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்க விளையாட்டுக் கழக நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர், திரு. தி. சுந்தரலிங்கம், உபதலைவர் திரு. சு. தனபாலசிங்கம், செயலாளர், திரு. க. ஜெயக்குமார் உப செயலாளர், திரு. பி. குணநாயகம், பொருளாளர், திரு. ந. ஆனந்தராசா.

விளையாட்டுக்குழு பொறுப்பாளராக திரு. த. ஜெயராசாவும் ஐவர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல்வள அபிவிருத்தியும் மகளிர் மேம்பாடும்

கடல்வளம் சார்ந்த தொழில்களில் கூட்டுறவு அமைப்பின் மூலம் எமது மகளிரை எவ்வாறு ஈடுபடுத்தி அதன்மூலம் அவர்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தி, கடல் வளம் சார்ந்த எமது பொருளாதாரத்தை எந்த வகையில் கட்டியெழுப்பலாம் என யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரையாளர் A. S. சூசை இக்கட்டுரையில் தெளிவுபடுத்தியுள்ளார். கடல்வளம் சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ள கூட்டுறவாளர்கள்இவற்றை செயற்படுத்த முன்வருவார்களா?

A. S. சூசை M. A.

இலங்கையில் 1920 கி. மீ. நீளமான கடற்கரையோரத்தில் 87808 கடற்றொழிலாளர் குடும்பங்களில் 412200 மக்கள் வாழ்கின்றனர். இவர்களில் 50 சதவீதமானோர் பெண்களாவர். இவர்கள் கடலில் சென்று நேரடியாக கடற்றொழிலில் ஈடுபடுவதில்லை. ஆயினும், இவர்களில் கணிசமான தொகையினர் மீன்களை ஏலமிடுதல், வலைகளிலிருந்து மீன்களைக் களைதல் வலைகளைத் துப்பரவு செய்தல், விற்பனை செய்தல், வலைபின்னுதல் மீன்களைப் பதனிடல் போன்ற கரை சார்ந்த பணிகளில் ஈடுபட்டுள்ளனர். எனினும் இவர்கள் இச்சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டுப் பின்தங்கிய நிலையிலேயே இருந்து வருகின்றனர்.

### மகளிர் பங்களிப்பு குறைவு

சமுதாயத்தில் நலிவுற்றிருக்கும், கடற்றொழிலாளர் குடும்பங்களை சமூக பொருளாதாரத்தில் முன்னேற்றுவதற்காக அரசுநிறுவனரீதியான பல அமைப்புக்கள் மூலம் பல அபிவிருத்தி திட்ட நடவடிக்கைகளை எடுத்துவருகின்றது. இந்தவகையில் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் முக்கியமானவயாகக் காணப்படுகின்றன.

1990 டிசம்பரில் 740 சங்கங்கள் நிறுவப்பட்டு 408 சங்கங்களேபதிவுசெய்யப்பாட்டன. இச்சங்கங்களில் 60 ஆயிரம் கடற்றொழிலாளர்கள் அங்கத்துவம் பெற்றிருந்தபோதும் மகளிரின் பங்களிப்பு மிகவும் குறைவாகவே காணப்பட்டது. (12190 மகளிரே அங்கத்துவம் பெற்றிருந்தனர்) இதில் தென்பகுதி மகளிர்தான் அதிகம் இடம்பெற்றிருந்தனர். வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள மகளிர்களின் பங்களிப்பு மிகமிகக்குறைவாகவே காணப்பட்டது.

இலங்கையின் மொத்த கடற்றொழிலாளரில் 65 . 4 சதவீதமானோர் வடக்குக் கிழக்கில் அடங்குவர். கிட்டத்தட்ட 269629 கடற்றொழிலாளர்களில் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் மகளிர்களாகும். இவர்கள் அச்சமூகத்தில் ஒரு மூடப்பட்ட சமூகமாகவே காணப்படுகின்றனர். இவர்களின் மேம்பாட்டுக்கு எந்தவிதமான வழிகாட்டல்களுமின்றி அடங்கிக்கிடக்கின்றனர். இவர்களை ஒன்றுதிரட்டி மீன்பிடிக் கிராமங்கள் தோறும் கடற்றொழிலாளர் மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு கடற்றொழிலில் அவர்களது திறனை வளர்க்கவும், கிராமங்களில் எழும் சிக்கல்களுக்கு அவர்கள் தாமே ஆராய்ந்து முடிவுகாணவும், சங்கச் செயற்பாடுகள், கிராம முன்னேற்றம் ஆகியவைகளில் சம பங்கு ஏற்று நலிந்து போயிருக்கும் சமுதாயத்தை முன்னேற்றவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இத்தகைய கூட்டுறவு சங்கங்கள் தமிழகத்தில் திறம்பட இயங்குகின்றன. எமது பிரதேசங்களில் இவ்வாறான கூட்டுறவு சங்கங்கள் ஏற்படாமல் இருப்பது பெருங்குறைபாடாக உள்ளது.

இன்று ஐக்கியநாடுகள் உணவு விவசாய நிறுவனத்தினால் செயற்படுத்தப்படும் (FAO) வங்கான விரிவுகுடாத்திட்டம்( BoBp, ) (Bay of Bangal Programme கடற்றொழில் மகளிர் மேம்பாட்டுக்கு பல திட்டங்களை முன்னெடுத்துச் செல்கின்றது. இலங்கையின் தென்பகுதியில் புத்தளம், மகாவெவ களுத்துறை, தங்காலை, கம்பஹா போன்ற இடங்களில் இத்திட்டத்தின் கீழ் பல குடியிருப்புக்களில் கருத்திட்டங்களை ஆரம்பித்துள்ளனர். ஆனால் வடக்குக்கிழக்கில் நிலவும் சாதகமற்றசூழ்நிலைஎமது பிரதேச மகளிர் மேம்பாட்டுக்கு மேலும் தடையாக அமைந்துள்ளது.

### கூட்டுறவுச் சங்கங்கள் எந்த வகையில் உதவி செய்யலாம்

கடற்றொழிலாளர் குடும்பங்களின் கரையோரச் சூழல் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதினால் குடியிருப்புகளில் மலசலகூட வசதிகள், குடிநீர், வடிகால், வசதிகளும் குறைவாகஇருப்பதனால்இவர்களின் சுகாதார மேம்பாட்டுக்கு சுகாதார, தொண்டர் நிறுவனங்களின் உதவி நாடப்பட வேண்டும். காப்புறுதி செய்தல், சேமிப்பு பழக்கத்தினை ஏற்படுத்தல், மகளிர் படிப்பகம் ஆரம்பித்து அறிவியல்ரீதியான தேடல்களை ஊக்குவித்தல், தலைமைத்துவப்பயிற்சி அளித்து, கூட்டுறவுச் சங்கங்களை திறம்பட நடாத்தவும்; குழந்தைகள் காப்பகம், மது ஒழிப்புப்பிரசாரம், மற்றும் குடும்ப நிர்வாகம் போன்றவற்றிலும் இவர்களை ஈடுபடுத்த வேண்டும்.

மகளிர் தங்களுடைய கடமைகளையும், உரிமைகளையும் அறிந்து விளிப்புணர்ச்சியோடும், கடமையுணர்வோடும் செயற்படும் போது ''நாம் தாழ்ந்தவர்கள் அல்லர், மிகவும் பிற்போக்கானவர்கள் அல்லர்'' என்ற விழிப்புணர்வை ஏற்படுத்த கூட்டுறவுச் சங்கங்கள் செயல்படவேண்டும்.

### வேலைவாய்ப்பு

புதிய கைத்தொழில்களில் (தையல்பயிற்சி, வலைபின்னுதல், முடித்தல் போன்றவற்றில்) ஆர்வமுள்ள மகளிருக்கு பயிற்சிகொடுத்து, மானிய அடிப்படையில், நூல்கள், தையல்இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கியும், அவர்களது உற்பத்திப் பொருள்களுக்கு கூலிகொடுத்து , அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு ஊக்குவிக்கவேண்டும்.

மீன்களைப் பதனிடும் முறைகளில் பயிற்சி கொடுத்து கருவாடுபோடுதல், கடலட்டை போன்றவற்றைத் தரமான முறையில் பதனிடுவதில் மகளிரை ஈடுபடுத்தியும் படித்த மகளிருக்கு மீன் விற்பனை நிலையங்களிலும், கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையங்களிலும் வேலைவாய்ப்புகள் வழங்கியும், கடற்றொழில் மகளிரின் எழுத்தறிவை ஊக்குவிப்பதற்கு கிராமங்கள் தோறும் முறைசாரக் கல்வி வகுப்புக்களை நடாத்தியும், படித்த மகளிர் ஊடாக பாலர் கல்வி நிறுவனங்களை ஏற்படுத்தி சிறுவர்களின் கல்வி அறிவினை உயர்த்தி அவர்களின் மேம்பாட்டுக்கு நடவடிக்கைகள் எடுப்பது அவசியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மலச்சிக்கல்" மனிதனின் சுகவாழ்வைப் பாதிக்கும்!

மனிதனின் சுகவாழ்வைப் பாதிக்கும் காரணிகளில் மலச்சிக்கலும் ஒன்று. மலச்சிக்கலில் இருந்து விடுபட்டு சுகதேகிகளாக வாழ வழி கூறுகிறார் யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட உடற்றொழியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வைத்திய கலாநிதி கே. சிவபாலன். இனிபடியுங்கள்.

வைத்திய கலாநிதி கே. சிவபாலன்

எமது உடலில் இருந்து வெளியேற்றப்படும் கழிவுப் பொருளையே ''மலம்'' என கூறுகிறோம். இதனை நாம் ஒதுக்குப்புறமாகச் சென்று கழிப்பது வழக்கம். மலகூடத்தின்மூலமோ, குழிதோண்டிப் புதைப்பதன்மூலமோ, இதனை அடக்கம் செய்கிறோம். ஆனால் நிலத்தினை ஆழமாக வெட்டி கிணறுகளின் அருகாமையில் புதைப்பது நிலத்தடி நீரிற்கு ஆபத்து என ம[illegible]துவர், அறிஞர் கூறுவர்.

### அறிவு நிலை நிகழ்வு

மலம் கழித்தல் என்பது சாதாரணமாக எமது அறிவு நிலையில் நடைபெறும் ஒரு நிகழ்வு ஆகும். ஆயினும் இது முற்றுமுழுதாக இச்சைவழி செய்யப்படும் செயலும் அல்ல. பெருங்குடலின் இறுதிப்பகுதியில் குறிப்பிட்ட அளவு மலம் சேர்ந்ததும் அது மலக்குடலினுள் தள்ளப்படுகிறது. மலக்குடல் தூண்டப்பட்டு மலம் கழித்தலுக்கான செயற்பாடுகளை ஆரம்கின்றது. முதலில் மலத்தின் தன்மையையும், அது வெளியேற்றப்பட வேண்டிய தேவையையும், மூளைக்கு [illegible]றிவிப்பதனால் அதை எமது உணர்வு நிலைக்குக் கொண்டு வருகிறது. மலக்குடலுள் வந்தது, வாயு நிலையில் இருந்தால் எல்லாவாசல்களும் திறக்கப்பட்டு வெளியேற்றப்படும்.

மலம் கழிக்க வேண்டுமென்ற உந்துதலை ஏற்படுத்திய அதேவேளை பெருங்குடல் மேலும் தூண்டப்பட்டு மலம் மேலும் வெளி நோக்கித்தள்ளப்படுகின்றது. மூடி வைக்கப்பட்டிருந்த மலவாசலின் ஒரு சுருக்கி இளகிவிடுகின்றது. ஆனால் எமது அறிவு நிலைக் கட்டுப்பாட்டிலுள்ள சுருக்கி எமது முயற்சியினால் மேலும் சுருக்கப்பட்டு மலம் வெளியேறுவது தவிர்க்கப்படுகின்றது. ஏற்ற இடம் கிடைத்ததும் எமது விருப்பத்தின் பேரில் இச்சுருக்கியு[illegible] தளர்த்தப்பட மலம் வெளியேறுகின்றது. நேரம், இடம் என்பன சரியாக அமையாவிடில் தொடர்ந்தும் எமது கட்டுப்பாட்டிலுள்ள இச்சுருக்கி தடையாக இருக்க பெருங்குடலின் தூண்டுதல் குறைவடைந்து மலம் கழிக்கும் எண்ணம் நீங்கி விடுகின்றது. சிறிது நேரம் சென்றபின் மீண்டும் வெளியேற்றும் முயற்சி ஆரம்பிக்கும். இவ்வாறு மலம் கழித்தல் என்பது தன்னியக்கமாக ஆரம்பித்து எமது அறிவு சார்ந்த அனுமதியுடன் நிறைவு பெறுகின்றது.

### ஆறுதலையும் மகிழ்வையும் கொடுக்கும்

மலம் கழித்தல் தினசரி நடைமுறைக்கு இசைவாக்கப்படக் கூடியது. ஒருநாளைக்கு (காலை எழுந்தவுடன்) ஒருமுறை மலம் கழிக்க வேண்டுமென்ற நியதி கிடையாது. மலக்குடல் தூண்டப்படும்போதே மலம் கழிப்பது சிறந்தது. சிறுவயது முதல் தினசரி ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மலகூடம் சென்று மலம்கழிக்கப் பழகிவிட்டால் ஒவ்வொரு நாளும் அந்நேரத்தில் இயல்பாகவே மலம் கழித்தல் ஆரம்பிக்கும், வழமைக்குமாறாக வேறுஇடம் சென்றால் மலம் கழிப்பது சிறிது சிக்கலாக இருக்கும். தூண்டுதல் இல்லாது, அதிகபயம், போன்ற உணர்ச்சிகள் ஏற்படுப்போது தன்னியக்கநரம்புகள் அதி[illegible]ம் தூண்டுவதால் தன்னை அறியாமலே மலம் கழித்து விடுவதும் உண்டு.

ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட நேரத்தில் எவ்வித சிக்கலுமின்றி மலம் கழிக்கப்படுவது ஆறுதலையும், மனமகிழ்வையும் கொடுக்கும். மலம் சிக்கல் இன்றி கழிவதற்கு;

(1) ஒவ்வொரு நாளும் போதியளவு மலம் உருவாக பெருங்குடலினுள் வரும் கழிவுகள் அதிகமாக இருக்க வேண்டும். இதற்கு எமது தினசரி உணவில் நார்ப்பொருட்கள் உள்ள உணவுகளை அதிகம் சேர்க்க வேண்டும். தவிட்டுடன்கூடிய அரிசி, குரக்கன், வரகு முதலிய தானியங்களும், வாழைப் பொத்தி, இலக்கறிவகைகளும் உணவில் சேரவேண்டும். புரதச்சத்துக்காக விலங்குணவுகளை உண்பவர்கள் அதிக நார்ப்பொருள் உள்ள உணவு வகைகளைச் சேர்த்துக்கொள்ளாவிட்டால் மலச்சிக்கல் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது நார்ப் பொருள்களை உணவில் சேர்த்துக்கொள்வதினால் மலம் கழித்தல் இலகுவானது மட்டுமின்றி பல்வேறு குடல் நோய்களை குறிப்பாக மூலவியாதி, குடல் புற்று நோய்கள் ஏற்படும் தன்மை குறைவடையும். அத்துடன் இருதய நோய்களைத் தவிர்க்கவும், சலரோகத்தைக் கட்டுப்படுத்தவும் இவை உபயோகமானவையாகக் காணப்படுகின்றன.

(2) உடலின் நீர் அளவு பேணப்படவேண்டும். உடலின் நீர்த்தன்மை குறைந்துவிட்டால் பெருங்குடலில் நீர் உறிஞ்சுவது அதிகரித்து அதனால் மலம் இறுகி கடினமாகிவிடும். இதனால் மலத்தின் கனவாயு குறைவதால் மலம் கழிக்கும் தூண்டுதல் ஏற்படாது. மலம் இறுகிவிடுவதால் வெளியேறும்போது மலவாசலைக் கீறிக்காயப்படுத்திவிடலாம். மலம் கழிக்கும்போது இயல்பாக வெளியேற அனுமதிக்க வேண்டும். மூச்சடக்கி, முக்கி, விரைவாக வெளியேற்ற முயலக்கூடாது. இது குருதிச் சுற்றோட்டத்தைப் பாதிப்பதுடன் மலவாசலில் உள்ள குழாய்கள் பாதிக்கப்பட்டு மலத்துடன் இரத்தம் சிந்தலும், மலவாசலில் குடல் வெளித்தள்ளவும், மலவாசலில் காயங்கள் ஏற்படவும் வழியமைத்துவிடும்.

(மிகுதி அடுத்த இதழில்)

## நவீன கழிப்பறைத்தொட்டி

யப்பானில் நவீன கழிப்பறைத் தொட்டி ஒன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இக்கழிப்பறைத் தொட்டியுடன் இணைக்கப்பட்டிருக்கும் சிறிய திரை ஒன்றின் மூலம், ஒருவர் இத்தொட்டியில் மலம், சிறுநீர் கழித்த இரண்டு நிமிடங்களில் அவரது மலத்தினதும், சிறுநீரினதும் தன்மைகளை தானியங்கிமுறையில் பகுப்பாய்வு செய்து முடிவுகளை அப்படியே திரையில் காட்டுகின்றது. அத்துடன் ஒரு பெண் கர்ப்பம்தரித்திருப்பதையும் இது கண்டுபிடித்துவிடுமாம். முதலில் மருத்துவமனைகளுக்கு வழங்கப்படவுள்ள இத்தொட்டி 1995ல் விற்பனைக்கு வரவுள்ளது.

# 'சீதனம்' மணப்பெண்களின் உயிர்குடிக்கும் விஷம் !

சீதன ஒழிப்பில், மணப்பெண் எரிக்கப்படும் வரையோ; கொல்லப்படும் வரையோ காத்திருக்கலாமா? 'தாமரைச்செல்வி' யின் இக்கேள்வி சிந்தனைக்குரியது. சீதன ஒழிப்புக்கு சட்டங்கள் சாத்தியப்படுமா? என்பதும், பழமையில்இருந்து விடுபட்டு, சமுதாய மன மாற்றமூலம், திருமணத் தடைகளைத் தாண்டி அதனைச் சந்திக்க தயாராகவேண்டும் என்பது தான் . . . இனி படியுங்கள்.

இன்று மணப் பெண்களை ஆட்டிப் படைக்கும் ''சீதனம்'' வடமொழியில் ''ஸ்திரிதனம்'' என்றுவழங்கப் பட்டுவந்தது காலகதியில் இச் சொல் ''ஸ்ரீதனம்'' என மருவி தமிழ்மொழியில் '' சீதனம் '' என்று வேரூன்றி விட்டது. ஆரம்பத்தில் திருமணத்தின் போது பெண்ணானவள் வீட்டில்இருந்து 'செல்வத்தோடு' வரவேண்டுமென்ற நடைமுறை, இன்று 'சீதன' மாக மாறியுள்ளது.

சீதனம் சமுதாயத்தின் சகல பகுதியினரதும் வாழ்க்கைப் பிரச்சனையாக அமைந்துள்ளது. இப்பிரச்சனையை, ஒரு சமூக அநீதியாகவோ, மனிதாபிமானம் சம்பந்தப்பட்ட விடயமாகவோ மாத்திரம் கருதிவிடாது, இதனை எமது சமூக பொருளாதார அமைப்புடன் சம்பந்தப்பட்ட பிரச்சனையாகவே அணுக வேண்டும்.

**சீதனம் பெண்ணுக்கு அவசியமா ?**

பெண்ணைத் திருமணம் செய்து கொடுப்பதற்காக பெண்ணைச் சாந்தோரால் கொடுக்கப்படும் விலையே சீதனமாகும். இது பேச்சுக் கலியாணங்களில் பிரதான இடம் வகிக்கின்றது. குடும்பம் ஒன்றை அமைக்கவும், அதன் நிலை பேற்றுக்கும் சீதனம் மூலம் கொண்டு வரப்படும் உடைமைகளும் நிதயும் அவசியமானதாகக் கருதப்படுகின்றன. இவற்றை அடித்தளமாகக்கொண்டு புதிதாகத் தோன்றும் ஒவ்வொரு குடும்பமும் தம்மை ஸ்தாபித்துக் கொள்ளலாம் என்ற எதிர்பார்பபு மத்தியதர, வறிய விவசாயக் குடும்பங்களில் சாதாரணமாக காணப்படுகிறது. எனவே சீதனத்தின்வழி சொத்தைத் திரட்டலும், அதன் மூலம் ஏற்படும் உயர் அந்தஸ்தைப் பேணலுமே குடும்ப வாழ்க்கை என்ற எண்ணம் வேரூன்றி விட்டது. இது எமது சீதனச் சந்தையை நன்கு வலுவாக்கி விட்டது.

சீதனம் பெண்ணுக்குப் பொருளாதார பாதுகாப்பு அளிக்கும் என்ற வாதமும் உண்டு. ஆனால் தன்னை நிலை நிறுத்திக் கொள்ளக் கூடியளவுக்கு பொருளாதார வலுவுள்ள பெண்ணுக்குக் கூட சீதனம் விருப்பப்படுவது வேடிக்கையானது. சீதனம் என்பது இருபாலாரையும் பாதிக்கும் பிரச்சனையாகவும் அமையலாம். பெண்ணை மனித ஜீவியென்ற வகையில் அல்லாது பொருளாதார நிலையை முதன்மைப்படுத்துவதால், அவளுக்கு தாழ்ந்த அந்தஸ்து வழங்கப்படுவதுடன் திருமண உறவில் சமமான பங்காளியாக அன்றி, சீதனச் சொத்தின் ஒரு பகுதியாக, பண்டமாக கருதப்பட வழிகோலுகிறது.

சீதன முறையானது பெண்ணைப் பெற்றோருக்குப் பெருஞ் சுமையாகும். அதிக புதல்வியருள்ள குடும்பங்கள் ஏழ்மை நிலைக்குத் தள்ளப்படும். இச்சுமையுணர்வு ஏனைய குடும்ப அங்கத்தவரையும் பாதிப்பதால் அவர்களது பொருளாதார, சமூக ரீதியான தீர்மானம் எடுத்தல்கள் இவ்வுணர்வின் வழி நடாத்தப்படும். இதன்போது உருவாகும் எதிர்மறையான கருத்துக்களால் மீண்டும் பெண்ணே பாதிப்புக்குள்ளாவாள்.

மறுபுறத்தில் மகளுக்காக உழைக்கும் தந்தையும், சகோதரிகளுக்காக உழைக்கும் ஆண் சகோதரர்களும்கூட எமது சமூகத்தில் இல்லாமல்இல்லை. ஆகவேதான் சீதனமுறை சமூகத்தின் ஒவ்வோர் அங்கத்தவனையும் ஏதோவோர் விதத்தில் பாதிப்பதாக உள்ளது. எனவே சீதன ஒழிப்பு என்பதனை ஆண்களுக்கு எதிரானதாகக் கருதுவது தவறானதாகும்.

**பழமையிலிருந்து விடுபட வேண்டும்.**

சீதன நடைமுறையில் இருந்து எவ்வாறு எம்மை விடுவிப்பது? நிலவுகின்ற பழமையான எண்ணங்களிலிருந்து நம்மை விடுவிப்பதே ஒரே வழியாகும். சுதந்திரமான திருமணம்பற்றியமுடிவு எடுத்தல்களுக்கு தடையான பழமைவாதப் போக்குகளில் சாதி, குடும்ப உறவுமுறை என்பன முக்கியமானவை. இவை இருக்கின்ற சமூக ஒழுங்கை பேணுகின்ற தடைகள்; சீதனம் என்ற பெருங்கேடு தரும் முறைகேடான வழக்கத்தை மீற விரும்பும் ஆணோ, பெண்ணோ, இவ்வாறான தடைகளைத் தாண்ட சந்திக்கத்தயாராகும் போது, சீதனப் பிரச்சனைகளிலிருந்து ஓரளவு தப்ப முடிகின்றது.

எமது சமுதாய வழமையையும், அவ்வழமையைப் பேணும் நிறுவனங்களின் கண்காணிப்பில் இருந்தும் விடுபட்டு நடைபெறும் திருமணங்கள் பொருளாதார அடித்தளமொன்றில்லாத நிலையிலும், சமூக அங்கீகாரம் இல்லா நிலையிலும் நடைபெறுகின்ற இவை கூடிய புறநிலையை முகங் கொடுக்கின்றன. இங்கு தான் கூட்டுறவு பற்றிய சிந்தனை அவசியம் தேவைப்படுகின்றது. ஒருவர் பலருக்காகவும், பலர் ஒருவருக்காகவும் என்ற கோட்பாட்டின் அடிப்படையில்ஏழை, எளியவர்களின் வாழ்க்கைப் பயணத்தைத் தங்குதடையின்றி செலுத்துவதற்குரிய வழிவகைகளை கூட்டுறவின் புரிந்துணர்வு நிலையில் ந்தனையை வலுப்படுத்தவேண்டும். சமூக சீர்திருத்தம்அவசியமாகும்போது அதை நடைமுறைப்படுத்துபவர்களை ஆதரவுடன் கைதூக்கிவிடுவது அனைவரதும் கடமையாகும். அப்போது தான் திருமணவாழ்வு என்பது பணம் ஒத்தோரின் வாழ்வாக அன்றி மனம் ஒத்தோரின் வாழ்வாக இருக்கும்.

எனவே அரசியல் அடக்குமுறைகளிலிருந்து விடுபட விரும்பும் எமது பிரதேசம் சமூக நியமங்களிலும் சீர்திருத்தங்கள்களைச்செய்துகொள்வது விரும்பத்தக்கதே. இச்சீர்திருத்தங்கள் மணப்பெண் எரிக்கப்படும் வரையிலோ மருமகள் கொல்லப்படும் வரையிலோ காத்திருக்கவேண்டியதில்லை.

— தாமரைச்செல்வி

**அவதானம் தேவை:**

பெண்கள் கர்ப்பம் தரித்திருக்கும் காலத்தில் மிகவும் அவதானமாக இருத்தல் வேண்டும் அதிர்ச்சிதரக்கூடிய செய்திகளைக்கேட்டாலோ, விபத்துக்கள் ஏற்பட்டாலோ, அது பிறக்கப் போகும் குழந்தையின் மூளையைப்பாதித்து, மூளை விருத்தி நிலை குன்றிவிடும். இத்தகய தாக்கங்கள் பிறக்கப் போகும் குழந்தையை மட்டுமல்ல தாயையும் பாதிக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ஊனம் உடலில் இல்லை

யாழ். ஜனார்த்தனன்

அதிகாலை நான்கு மணிக்கே விழித்துக்கொள்ளும் தந்தை ஆறுமணியாகியும் படுக்கையைவிட்டு எழுந்திருக்காது தூங்குவதைப் பார்த்ததும் ஒருகணப்பொழுது மனம் துணுக்குற்றாலும் கட்டிலுக்கு சமீபமாகச் சென்று பார்த்தாள் சுகுணா. நிம்மதியாய் தூங்கிக்கொண்டிருந்தார் சுந்தரம். இரவு வெகுநேரம் வரை தூக்கம்வராது கஸ்ரப்பட்டிருப்பார். விடிகாலையில் அயர்ந்திருப்பார் என எண்ணியவளாய் கிணற்றடிக்குச் சென்றாள். அம்மா பாத்திரங்கள் தேய்த்துக்கழுவிக்கொண்டிருந்தாள். மகளைப் பார்த்ததும் ''அப்பா எழுந்துவிட்டாரா சுகுணா'' என்றாள்.

''இல்லை''

''இர்வுபூரா ஒரேயோசனை. தூங்காது புரண்டுகொண்டே கிடந்தார்''

''இப்ப யோசிச்சு என்னம்மா செய்யிறது?''

''நீ என்னடி சொல்லுறே..'' என்று மகளை நிமிர்ந்துபார்த்தாள் மரகதம்.

''ஒன்றுக்கு நாலாய் பெண்களைப் பெற்றுவிட்டு இப்ப யோசிச்சு என்ன பிரயோசனம்?''

''ம்'' என்று பெருமூச்சுவிட்ட மரகதம் ''தலையிடியும், காய்ச்சலும் தனக்குத்தனக்கு வந்தால்தான்டி தெரியும்'' என்று கூறியவள் வேலையில் கவனத்தைச் செலுத்தினாள்.

அம்மாவைப்பார்க்க அவளுக்கே பொறாமையாயிருந்தது. இளம்வயதில் எப்படி அழகாயிருந்திருப்பாள்? இந்த அழகைப் பார்த்து அப்பா சீதனம் இல்லாமல் பெண் எடுத்து தங்கள் இளமைக் காலத்தை சந்தோஷமாகக் கொண்டாடியதன் விளைவு அடுக்கடுக்காய் நாலு பெண்கள். நாலும் குமராகிவிட்டதால் அப்பாவுக்குக் கவலை. அப்பாவை நினைத்தால் அவளுக்குப் பரிதாபமாயிருந்தது. வாழ்க்கையில் குறை ஏதும் இன்றி தங்களை வளர்த்து ஆளாக்கிவிட்டவர் இப்போது அவதிப்படுகின்றார். ஆசையாய்ப் பெற்ற முதல் பிள்ளை அக்கா சரோசா. அப்பாவின் மனம் புண்படும்படியாய் எதிர்த்துப் பேசிவிட்டாளே என்பதை நினைக்கும்போது சுகுணாவுக்கு ஆத்திரம் பொங்கியது. முதல்நாள் வீட்டில் நடைபெற்ற சம்பவம் அவள் மனதில் நிழற்படமாக விரிந்தது.

கல்யாணப் புறோக்கர் கந்தையா வந்து சுந்தரத்துடன் ஒருமணி நேரமாகக் கதைத்துவிட்டுச் சென்றபின்பு சுந்தரம் மூத்த மகளையும், மனைவியையும் கூப்பிட்டுக் கதைத்தார்.

'மரகதம் நாம்செய்த புண்ணியம்ஒருமாப்பிள்ளை சீதனமில்லாமல் பெண்கேட்டு வந்திருக்கு. இனி சரோசாதான் சம்மதம் சொல்லணும்'' என்றார்.

''பையன் யாருங்க?'' மரகதம் ஆவலுடன் கேட்டாள்.

''சீனிவாசகத்தின்ரை மூத்த பையன். கிளறிக்கல் உத்தியோகம். குடிவெறியில்லாத பையன் பார்ப்பதற்கும் லட்சணமாயிருப்பான். ஆனால்.. ''ஏன் அப்பா இழுக்கிறியள். மிகுதியையும் சொல்லுங்கோவன். உங்களுக்குச் சொல்ல இஸ்டமில்லையென்றால் நான் சொல்லுறன். அந்த நல்ல மாப்பிள்ளை ஒரு காலை மட்டும் விந்தி விந்தி நடப்பான். இல்லையப்பா?'' என்றாள் சரோசா.

''அதனால் என்னம்மா? தங்கத்திலே ஒரு குறையிருந்தாலும் தரத்திலே குறை இருக்காதேயம்மா''

''எனக்கு இந்த மாப்பிள்ளையேவேண்டாமப்பா. நாலு இடத்துக்கு நான் போய்வர என்னைப் பார்த்து ஊர் சிரிக்குமப்பா. நொண்டியைக் கட்டிக்கொண்டழவேண்டுமென்று எனக்கு என்ன தலைவிதி'' புயலாய் சீறிவிட்டு போய்விட்டாள்.

''அவள் கூறுவதிலும் நியாயமிருக்குங்க. என்ரை பிள்ளைக்கு என்ன குறை?'' மரகதம் மகளுக்கு பரிந்துரைத்தாள்.

''மரகதம் நிலமையை யோசித்துத்தான் கதைக்கிறியா? உன்னைச் சீதனத்துடனா கல்யாணம் செய்தேன்? இப்ப லட்சலட்சமாக வல்லவா கேட்கிறார்கள். நாலுபேருக்கும் . . .''

''அதுக்காக அவளை நொண்டி மாப்பிள்ளைக்கு . . .''

''மரகதம்'' என்று உறுமினார். மரகதம் வாயடைத்துப் போனாள்.

ஊர் உலகத்திலை மற்றவர்களுக்கு புத்திகூறுபவர்கள், நியாயம் பேசுபவர்கள், உபதேசம் செய்பவர்கள் எல்லாம் தனக்கு என்று வரும்போது மட்டும் பின்னடைவதேன்? அக்கா சீதனம் கேட்கும் ஆண்களை வெறுத்து ஒதுக்க வேண்டும். ஊனமுற்றோரை உதாசினம் செய்யக்கூடாது என்று மேடைகளில் பேசிவிட்டு தனக்கு என்றவுடன் புலியாய் சீறுவது ஏன்? எல்லாம்வெறும் வாய்ப்பேச்சுத்தானா? கொள்கை, லட்சியம், முற்போக்கு எல்லாம் சுயநலத்துக்குள் புதைந்து போவது ஏன்? இந்தக் கேள்விகள் சுகுணாவின் மனதில் குமுறும் அலைகளாய் ஆர்பரித்துக் கொண்டிருந்த வேளையில் சரோசா அலங்காரப்பதுமையாக அவள் முன்வந்து நின்றாள். தன் மனதில் தோன்றியவற்றை எல்லாம் அப்படியே அவளிடம் கேட்டுவிட்டாள் சுகுணா. ''ஏன்டி நீ எனக்கு அட்வைஸ் பண்ணுமளவுக்கு நான் என்ன இழிச்சவாய்சி என்று எண்ணியிட்டியா? நீ ஒரு ஊனமுற்றவனைக் கல்யாணம் செய்வியா?'' என்று கேட்டுவிட்டாள். ''அக்கா'' நான் கேட்கிறேனே என்று கோபப்படுகிறாயே, நன்றாக யோசித்துப் பார், எமது விடுதலைக்குப் போராடும் எத்தனையோ அண்ணன் - தம்பிகள் கையிழந்து, காலிழந்து செயற்கை உறுப்புடன் திரிகின்றார்களே, இவர்கள் மனிதர்கவில்லையா? கல்யாணத்தின் பின்பு ஏதோ ஒரு விபத்தில் ஊனம் ஏற்பட்டால் அவர்களை விலக்கி வைத்து விடுவோமா? மனிதாபிமான உணர்வுடன் நிதர்சனமான உண்மைகளை சந்திக்கப்பயப்படுகின்றோமேயன்றி . . . . நீ எனக்கு ஒரு அக்கா இருக்கின்றாய் என்பதால் இதுவரை திருமணம் என்ற ஒன்றைநான் நினைக்கவேயில்லை. ஆனால் நீ கேட்டாயே ஒரு கேள்வி, அதற்குபதில் சொல்கின்றேன். அப்பா சீதனம் வாங்காது அம்மாவை கரம்பிடித்தார். நொண்டியோ, முடமோ அதற்காக அவர்கள் சீதனமின்றி பெண் கேட்கவில்லை. அப்பாவுடைய உதாரண குணத்திற்காக எமது குடும்ப லட்சணத்தினால் தான் கேட்டார்கள். நீ அதை தவறாகக் கருதிவிட்டாய். நொண்டியானாலும் அவன் ஆண்பிள்ளை. அரசு உத்தியோகம், சீதனம் கேட்காமலிருப்பானா? ஆனால் நல்ல குடும்பத்து பெண்ணை விரும்பியே அவர்கள் கேட்டார்கள் என்று புறோக்கர் கூறினார். நீ உண்மையான அக்காளாய் இருந்தால் நான் மனப்பூர்வமாய் கூறுகின்றேன். நான் அந்த மாப்பிள்ளையை

(11ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்ன செய்தார் தெரியுமா ?

மகாத்மா காந்தியும், மறைந்த இந்தியப்பிரதமர் ஜவஹர்லால் நேருவும், பாதயாத்திரை ஒன்றினை மேற்கொண்டிருந்தனர். வழியில் ஒரு பள்ளம் தென்பட்டது. அதனைத் தாண்டுவதற்கு நேரு சிறிது தூரம் பின்னோக்கிச் சென்று ஒரே ஓட்டமாக ஓடி பள்ளத்தைத் தாண்டி விட்டார். ஆனால் காந்திஜி அப்படிச் செய்யவில்லை.

என்ன செய்தார் தெரியுமா?

நீளமான மரப்பலகை ஒன்றை எடுத்து வரச்சொல்லி அப்பலகையை பள்ளத்தின் மீது போட்டு கடந்து சென்றார்.

அப்பொழுது நேரு, தாங்களும் என்னைப்போல் பள்ளத்தைத் தாண்டியிருக்கலாமே என்று கேட்டார்.

அதற்கு காந்திஜி சிரித்தவாறு என்ன சொன்னார் தெரியுமா ?

அந்தப் பள்ளத்தைத் தாண்ட நீங்கள் எவ்வளவு தூரம் பின்னால் சென்று ஓடி வந்தீர்கள் தெரியுமா ? நான் அப்படி பின்வாங்க விரும்பவில்லை. இருந்த இடத்தில் இருந்தே முன்னேற விரும்புகிறேன் என்றார்.

## பெருமலையாய் வலிமை சேர்வோம்

வேறுபட்ட ரசனைகள், போக்கி யல்பு
வீட்டுநிலை, மெய்ப்பாங்கு கொள்ளும் போதும்
வீறுதருங் கல்விபெற மாணாக்கர் நாம்
மேவு பணியில் சகோத ரத்துவத்தை
ஊறுவித்து கூட்டுறவை வளர்ப்போமானால்
உதவியொரு வர்க்கொருவர் ஊக்கத்தோடு
நூறுபணி நமக்கே நாம் புரிதல் கூடும் !
நுண்துககள்ள் பெருமலையாய் வலிமை சேர்வோம் !

— ச. வே. பஞ்சாட்சரம்

### ஐக்கியதீபம் மாணவர்சழக அங்கத்தவர்கள்

### யா / தெல்லிப்பழை மகாஜனாகல்லூரி

| | பெயர் | ஆண்டு | ஆர்வம் |
|---|---|---|---|
| 1. | மதிமாறன் | 10 ஏ | கட்டுரை, சதுரங்கவிளையாட்டு |
| 2. | சு. நிமலன் | 10 ஏ | கவிதை, கட்டுரை, கதை, சதுரங்கம் |
| 3. | தா. நிகேதன் | 10 பி | கதை வாசித்தல், வீட்டுத் தோட்டம் |
| 4. | கா. தேவகாந்தன் | 10 பி | கதை வாசித்தல், சதுரங்கம் |
| 5. | வா. வசீகரன் | 10 பி | பொது அறிவு, பூப்பந்து |
| 6. | பா. மயூரன் | 10 பி | கதை வாசித்தல் |
| 7. | சி. சிவகோசரன் | 10 ஏ | பொதுஅறிவு, சிறுவர்கதை படித்தல், கதைஎழுதுதல். |
| 8. | ஆ. பிறையாளன் | 10 ஏ | கதை வாசித்தல் பூப்பந்து |
| 9. | க. திருக்குமரன் | | கட்டுரை கவிதை வாசித்தல், |
| 10. | ஜெ. ஜெகதாம்பிகை | 10பி | சட்டுரை வீட்டுத்தோட்டம் |
| 11. | இ. கிரிஷாந்தி | 10 பி | கதைவாசித்தல், பூந்தோட்டம் |
| 12. | இ. ஜெனகா | 10 பி | ,, கதை எழுதுதல் கரம் விளையாடுதல் |

### யாழ். சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயம் - வேலணை

13. ஜெ. இரகுநாதபோஸ் ஆண்டு 9 திருக்குறள் மனனம் செய்தல், கதை எழுதுதல்

### மாணவ மணிகளே !

ஐக்கிய தீபம் திங்கள் இதழின் ' மாணவர் கழகத்தில் ' அங்கத்தவராகி உங்கள் ஆக்கங்களை பிரசுரிப்பதற்கும், 'ஐக்கிய தீபம்' போட்டிகளில் பங்குபற்றவும் உடன் விண்ணப்புங்கள்.

உங்கள் பெயர், வயது, பாடசாலை, வகுப்பு, ஆர்வம் போன்ற விபரங்களுடன் அதிபர், அல்லது வகுப்பாசிரியர் ஒப்பத்துடன் உறுதிசெய்து ரூபா 10/- உடன் விண்ணப்பங்களை **ஆசிரியர்**, ' மாணவர் கழகம்', '' ஐக்கிய தீபம் '' 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.

**எங்கள் கேள்வி 2க்குரிய சரியான விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்.**

— ஆசிரியர்

## தெரிந்து கொள்ளுங்கள்

| | | |
|---|---|---|
| முத்தமிழ் | - | இயல், இசை, கூத்து |
| முக்கொடி | - | விற்கொடி, புலிக்கொடி, மீன்கொடி |
| மும்முரசு | - | வெற்றிமுரசு, கோழைமுரசு, மங்களமுரசு |
| மும்மலை | - | கொல்லிமலை, நேரிமலை, பொதிகைமலை |
| முந்நதி | - | பொருகைநதி, காவிரிநதி, வைகைநதி |
| முப்பதி | - | கருவூர், உறையூர், மதுரை |
| முந்நாடு | - | குடநாடு, புன்னாடு, தென்னாடு |
| முப்பிறப்பு | - | உம்மை, இன்மை, மறுமை |
| முப்பொறி | - | வாக்கு, காயம், மனம் |
| முக்காலம் | - | நிகழ்காலம், எதிர்காலம், இறந்தகாலம் |
| முத்தொழில் | - | படைத்தல், காத்தல், அழித்தல் |
| முக்குற்றம் | - | காமம், வெகுளி, மயக்கம் |
| முச்சுடர் | - | நிலவு, தீ, ஞாயிறு |
| மும்மதம் | - | கன்னமதம், கபோதமதம், பீயமதம் |
| முக்குணம் | - | சாத்துவிகம், இராசதம், தாமதம் |
| முப்பழம் | - | வாழை, பலா, மா |
| மூவிடம் | - | தன்மை, முன்னிலை, படர்க்கை |
| மூவுலகம் | - | பூதி, அந்தரம், சொர்க்கம் |
| மூவேந்தர் | - | சேரன், சோழன், பாண்டியன் |
| முச்சங்கம் | - | முதல்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் |
| முன்நோன்பு | - | உபவாசம், தவம், விரதம் |

**வி. விஜயலஷ்சுமி**, கோவில் வீதி யாழ்ப்பாணம்.

### சிறுவர்கள் பட்டம் விடுவார்கள் விழிப்பாயிருங்கள் !

சிறுவர்கள் இப்போது வீதியில் பட்டம் விட்டு வேடிக்கை பார்க்கிறார்கள். வீதியால் போவோர் வருவோருக்குத் தர்மசங்கடமான ஒரு நிலை.

வட இந்தியாவில் புவனேஸ்வர் என்ற இடத்தில் வீதியால் மோட்டார் சைக்கிளில் பிரயாணம் செய்த ஒருவர் கழுத்தில் பட்டக்கயிறு மாட்டப்பட்டு தலை துண்டிக்கப்பட்டு அந்த இடத்திலேயே துடிதுடித்து மரணமானார். இது அண்மையில் நடைபெற்ற மிகவும் துக்ககரமான சம்பவமாகும். எனவே நீங்களும் விழிப்பாயிருங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொறுப்புள்ள ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சங்க நிர்வாகம், உறுப்பினர் நன்மைக்காகவும், சட்டமுறையாகவும், பயனுள்ளவாறும் மேற்கொள்ள வேண்டியதாகும். அதற்கு உதவும் வகையில் கைநூல் தயாரிக்கப்பட்டுள்ளது''

பிரதேச செயலர்களின் கூட்டுறவுப் பணிகளுக்கு உதவும் வகையில் தயாரிக்கப்பட்ட சட்ட ரீதியான கைநூலில் இலங்கை கூட்டுறவுக் கல்லூரி அதிபரும், கல்வி முகாமைத்துவ பிரதி ஆணையாளருமான ஜயந்தா சி புலுமுல்ல மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; சட்ட முறையான ஏற்பாடுகளைப் போன்று, சட்ட முறையான தீர்மானங்களை எடுப்பதற்கு அடிப்படையாகக் கொள்ள வேண்டிய மூலாதாரங்களும், முகாமைத்துவ வழி காட்டலும் அடங்கிய இந்நூல், கூட்டுறவுப் பிரதி ஆணையாளர்களாகவும், உதவிக் கூட்டுறவு ஆணையாளர்களாகவும் கடமையாற்றும், பிரதேச, உதவிப்பிரதேச செயலாளர்களுக்கும், அவர்களுடைய பணிக்கு உதவும் கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர்களுக்கும் வழிகாட்டியாக அமைந்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளது.

இக்கை நூலைத்தயாரித்த கூட்டுறவுக் கல்லூரியின், சட்டம் தொடர்பான விரிவுரையாளர் திரு. ஏ. பி. புளத்கமவேறு விடயங்களுக்கிடையில் கூட்டுறவு விடயமும் பிரதேச செயலர்களிடம் கையளித்திருப்பதால் அது அவர்களுக்கு புதிய அனுபவமாக இக்க்க முடியும். சட்ட முறையான அதிகபணிகள் கையளிக்கப்பட்டிருக்கின்ற படியால் இது பொறுப்பு வாய்ந்த பணியாக அமைந்துள்ளது. என்றுகருத்து வெளியிட்டுள்ளார்.

## ஊனம் ... ...

(9-ம் பக்க தொடர்ச்சி)

ஏற்கின்றேன் நீயே முன்நின்று செய்துவை.'' என்று கண்ணீர் மல்கக் கூறினாள்.

'' சுகுணா, சுகுணா '' என்று சுந்தரம் ஓடிவந்து மகளை தழுவினார். அவர் விழிகளில் ஆனந்தக் கண்ணீர் அருவியாய் சொரிந்தது.

'' அப்பா! எங்கள் குடும்ப கௌரவம் தான் அப்பா எங்களுக்கு சீதனம், எனக்குஎன்று ஏதும் தர இருந்தால் அதனை அக்காவுக்கு கொடுத்து அவள் விரும்பும் ஒருவருக்கு திருமணம் செய்யுங்கள். உடல் ஊனம் ஒன்றும் செய்யாது மன ஊனத்தை மாற்றாத வரை எமக்கு விமோசன இல்லை'' என்றாள்.

'' சுகுணா சட்டங்களாலும், திட்டங்களாலும் செய்ய முடியாதவற்றை உன் நல்ல உள்ளத்தால் சாதித்து விட்டாய். உனக்கு அக்காளாகப் பிறந்ததற்கே பெருமைப்படுகின்றேன். என்னுடைய மன ஊனத்தை சிலநொடிப்பொழுதிலே உன் செயலால் மாற்றி விட்டாய். எமது சமுதாயத்தில் இப்படியான மனமாற்றம் ஏற்பட வேண்டும். ஒரு ஆணைப்பூமிக்கு தருபவனே பெண்தான். அவளே தன் பிள்ளைக்கு சீதனம் கேட்கிறாள். ஏழையை மருமகளாய் ஏற்க மறுக்கிறாள். எம்மைப் போன்ற பெண்களே பெற்றோரின் பொருளாதார நிலை தெரிந்தும் தங்களுக்கு சீதனம் போதாது என்று கேட்கும் கொடுமையிருக்கின்றது. இந்த மன ஊனம் மாறவேண்டுமாயின் சமுதாய அடிப்படையில் எல்லோரிடமும் ஓர் மனமாற்றம் ஏற்பட்டேயாக வேண்டும். அப்போது தான் சீதனம் கேட்கக்கூடாது, வாங்கக் கூடாது, கொடுக்கக்கூடாது என்ற ஓர் நிலைப்பாடு தானாகவே ஏற்படும். அப்பா உங்கள் விருப்பப்படியே, சுகுணாவின் நல்ல உள்ளத்தால் நான் மாறி விட்டேன். அந்த வரனை முற்று முழுதான மனப்பூர்வமாய் நான் ஏற்கின்றேன்.'' என்றாள் சரோசா,

'' அக்கா'' என்று அவளை ஓடிச்சென்று தழுவிக் கொண்டாள் சுகுணா.

( யாவும் கற்பனை )

## கண்காட்சி கலைவிழா

வலிகாமம் ப. தெ. வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணியால் நடாத்தப்படும் கண்காட்சி, கலைவிழா எதிர்வரும் 20, 21, 22ம் திகதிகளில் மானிப்பாயில் உள்ள கொத்தணி நடுவப் பணியகத்தில் நடைபெறவுள்ளது.

## எதிர்வரும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தகைய அரசின் கொடூர செயலைக் கண்டித்து கறுப்புப்பட்டி அணிந்தும் அரசின் செயலைக் கண்டிக்கும் பாதாதைகளும், சுலோகங்களும் தாங்கி பேரணியாகச் சென்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்க வதிவிடப் பிரதிநிதிக்கும், யாழ் அரச அதிபருக்கும் மகஜர்கள் கையளிக்கப்படவுள்ளனர்.

எனவே இம்மாபெரும் கண்டனப் பேரணியில் சகல கூட்டுறவாளர்களையும். அனைத்துக் கூட்டுறவு நிறுவனங்களின், பணிப்பாளர்கள், பணியாளர்கள், உறுப்பினர்களையும் திரண்டுவந்து கலந்து கொண்டு கூட்டுறவாளரின் ஒன்றுபட்ட எதிர்ப்பினைத் தெரிவிக்குமாறு யாழ். மா. கூட்டுறவுச் சபை அறைகூவல் விடுத்துள்ளது.

## போஷாக்கின்மையால் மரணம்

உலகில் ஆண்டுதோறும் 43 லட்சத்திற்கும் அதிகமான சிறுவர்கள் போஷாக்கின்மையால் மரணமடைகிறார்கள் இம் மரணம் தென் ஆசியாவில்தான் அதிகம். 5 வயதுக்கும் 18 வயதுக்கும் உட்பட்ட 19 கோடி சிறுவர்கள் கூடுதலான போஷாக்கின்மைக்கு ஆள்ளாகிறார்கள்.

ஆதாரம் : உலக சிறுவர் நூல்

## எங்கள் கேள்வி 3

(1) வரலாற்று நெறியில் அமைந்த புராணம் எது ?
(2) இலங்கை கூட்டுறவு சம்மேளனத்தின் முதலாது தலைவர் யார் ?
(3) யாழ் கூட்டுறவுப் பாடசாலை எந்த ஆண்டு நிறுவப்பட்டது ?
(4) முதல்முதல் தபால் தலை எப்போது வெளியிடப்பட்டது?
(5) யாழ் பல்கலைக் கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழா எங்கு நடைபெற்றது ?
(6) சர்வதேச குத்துச்சண்டை தலைவர் என அழைக்கப்படுபவர் யார் ?
(7) 'மிஸ்டர் அமெரிக்கா' என்ற பட்டம் யாருக்கு எந்த ஆண்டு வழங்கப்பட்டது ?
(8) 'பத்து கட்டளைகள்' ( Ten Com Mandments ) என்னும் புகழ்பெற்ற திரைப்படத்தை தயாரித்தவர் யார்?
(9 சாணக்கியர் நெப்போலியன் இங்கிலாந்து ~~மன்னர்~~ 3ம் றிச்சட் ஆகியமூவருக்குமிடையே உள்ள ஒற்றுமை என்ன?
(10, அதிக உயரமுடைய மிருகம் எது ?

மாணவர்களே, உங்கள் பதில்களை எழுதி, அங்கத்துவ விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து, 15-7-94க்கு முன் **எங்கள்பதில்** என்பதனை வெட்டி ஒட்டி அனுப்புங்கள். பரிசில்கள் காத்திருக்கின்றன. 'எங்கள் பதில்' என்பதனை வெட்டி ஒட்டாத பதில்கள் நிராகரிக்கப்படும். அனுப்ப வேண்டிய முகவரி : **எங்கள் பதில், ஆசிரியர்,** ஐக்கிய தீபம், 14, மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்ப்பணிப்புடன் கூட்டுறவுக் கல்வியை புகட்ட முன்வர வேண்டும் !

யாழ். மாவட்ட கூட்டுறவுச்சபை வடபகுதி கூட்டுறவு வளர்ச்சிக்கு - குறிப்பாக கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய சேவையை இன்றுதான் நான் அறிந்தவன் அல்ல. புல்வேறு நிலைகளில் கூட்டுறவுக்கு இச்சபை ஆற்றிய சேவையை முன்னரே அறிந்துள்ள படியால் சபையை பாராட்டாமல் இருக்க முடியாது''

கூட்டுறவுச் சங்கங்களின் கல்வி உத் யோகத்தர்சளுக்கான தொடர் பயிற்சி நெறி சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராக் கலந்துகொண்ட யாழ். பிரதேசசெயலர் கலாநிதி க. குணராசா மேற்கண்டவாறு பாராட்டு தெரிவித்தார்.

கூட்டுறவுச்சபை உபதலைவர் திரு. தி. சுந்தரலிங்கம் தலைமையில் இவ்வைபவம் யாழ். மா. கூ. சபை மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

கலாநிதி க. குணராசா தொடர்ந்து பேசுகையில், கூட்டுறவில் கல்விப் பயிற்சி சிறப்பான அம்சமாகும். பயிற்சி பெறும் ஒவ்வொருவரும், அதனை சமூகத்திற்குப் பயன் அளிக்கக்கூடிய வகையில் அர்ப்பணிப்புடன் அவர்களுக்குப் புகட்ட வேண்டும். இதனை எல்லோராலும் செய்ய முடியாது என்று கூறினார்.

பிரதிக்கல்லில் பணிப்பாளர் திரு. ச. சுப்பிரமணியம் பேசுகையில், கூட்டுறவுச் சங்கங்கள், கல்வி உத்தியோகத்தர்கள், பெறும் பயிற்சியை சமுதாய மட்டத்திற்குக் கொண்டு செல்லக்கூடிய வகையில் அவர்களைப் பயன்படுத்தக்கூடிய வகையில் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். கூட்டுறவுப் பணியாளர்களும் சேவை மனப்பான்மையுடன் தம் கடமையில் ஈடுபட்டு தாம் பெற்ற பயிற்சியை சமுதாயத்திற்கு வக்ங்க முன்வர வேண்டும் என்று கூறினார்.

பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சிவானந்தம், பொறியியலாளர் திரு. எம். தில்லைநாதன், கூ அ. உதவி ஆணையாளர் திரு. மு. க. முருகையா, கூ. ப. கல்லூரி அதிபர் திரு. பொ. சண்முகசுந்தரம், ஆகியோரும், மாணவர் சார்பில் திரு. பகவத்சிங், திரு. பாலசிங்கம் ஆகியோரும் உரையாற்றினார்கள்.

கூ. பயிற்சி அளிப்பு உத்தயோகத்தர் திரு. வீ. கே. சிவராஜசுந்தரம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

சான்றிதழ்களை யாழ். பிரதேச செயலர் கலாநிதி க. குணராசா வழங்கினார்.

### அறிவித்தல்

'' ஐக்கியதீபம் '' வருட சந்தா 60/ மட்டுமே. இல. 14, மணிக்கூட்டு வீதியில் உள்ள மாவட்ட கூட்டுறவுச் சபையுடன் தொடர்பு கொண்டு இன்றே சந்தாதாரராகச் சேருங்கள்.

### கருத்தரங்கு

யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கக் கிளைக்குழுத் தலைவர், செயலாளர்களுக்கான கருத்தரங்கு அண்மையில் சங்கத் தலைவர்திரு மா. புலேந்திரன் தலைமையின் நடைபெற்றது.

### அஞ்சலிக் கூட்டம்

வலி கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கத்தலைவர் அமரர். வே. சின்னத்தம்பி அவர்களின் அஞ்சலிக்கூட்டம் மேற்படி சங்கத்தில் உப தலைவி திருமதி. லலிதா மகேந்திரன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இவ் அஞ்சலிக்கூட்டத்தில் கூட்டுறவாளர்கள் பலரும் கலந்துகொண்டு அஞ்சலிஉரை நிகழ்த்தினார்கள்.

### கூட்டுறவாளர் அஞ்சலி

யாழ். பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ. துரைராசாவின் மறைவுகுறித்து யாழ். மாவட்ட ப. நோ. கூ. சங்கங்கங்கள், தீவகக் கோட்ட கூட்டுறவு ஒன்றியம் ஆகியன அஞ்சலி தெரிவித்து துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டிருந்தன.

ச கானை, பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்கங்களும் அஞ்சலி துண்டுப் பிரசுரங்கள் வெளியிட்டிருந்தன.

### வாசகர்களே !

''ஐக்கியதீபம்'' பற்றிய உங்கள் கருத்துக்கள், அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. எழுதி அனுப்புங்கள். - ஆசிரியர்

### போட்டியின்றி தெரிவு

யாழ்ப்பாணம் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவு சங்கத்தின் 12 கிளைகளுக்கும்கிளைக் குழுத் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் அண்மையில் தாக்கல் செய்யப்பட்டபோது, ஒவ்வொரு கிளைக்கும் 5 [illegible] மேற்படாத அங்கத்தவர்கள நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்திருந்தமையால் [illegible] ல கிளைகளுக்குமான கிளைக்குழு அங்கத்தவர்கள் போட்டி இன்றி தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

யாழ். பிரதேச செயலக கூட்டுறவுப் பரிசோதர் திரு, பொ. கணேசலிங்கம் தேர்தல் உத்தியோகத்தராக கடமை ஆற்றினார்.

### கலந்துரையாடல்

கூட்டுறவுப் பணியாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று கடந்த 12-ம் திகதி யாழ். தொழில் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டது.

சுன்னாகம் ப. நோ. கூ. சங்க மண்டபத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் சங்கத் தலைவர் திரு. சி. நவரத்தினம், உதவித்தொழில் ஆணையாளர் திரு. சிவப்பிரகாசம், திணைக்கள உத்தியோகத்தர்கள், வைத்திய கலாநிதி இராசேந்திரன் உட்பட சங்கப் பணியாளர்களும் கலந்து கொண்டார்கள்.


## விளம்பர அன்பளிப்பு :

**சுன்னாகம் ப. நோ கூ சங்கம்**
**காங்கேசன் துறை வீதி, சுன்னாகம்**

**பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்**
**பண்டத்தரிப்பு.**

**நல்லூர் ப. நோ கூ, சங்கம்**
**திருநெல்வேலி, யாழ்ப்பாணம்**

**கரவெட்டி பனை, தென்னைவள**
**அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**

**பருத்தித்துறை ப. தெ. வ.**
**அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்**


யாழ். மாவட்ட கூட்டுறவுசபை அச்சகத்தில் அச்சிடப்பட்டு இல. 14, மணிக்கூட்டு வீதியில் உள்ள மாவட்ட கூட்டுறவு சபையினரால் யூன் மாதம் வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org